**செய்தி வெளியீடு எண்: 669** **நாள்: 15.09.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (15.9.2018) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை

********

மாண்புமிகு அம்மா என்னும் தெய்வத்தை வணங்கி,

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மக்கள் நல்லுறவு மையம் பலநோக்கு கூட்ட அரங்கு திறப்பு விழா மற்றும் புதிய கட்டடங்கள் திறப்பு விழா,புதிய கட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவிழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற சிறப்பான நிகழ்ச்சிக்கு வரவேற்புரை நிகழ்த்திய மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. பொன்னையா அவர்களே!

குறைந்த நேரமே பேசினாலும், அற்புதமான கருத்துக்களை பேசி அமர்ந்துள்ள மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
திரு. ஆர்.பி.உதயகுமார் அவர்களே!

முன்னிலையுரை ஆற்றி இந்த மாவட்டத்திலே நடக்கின்ற அத்தனை நிகழ்ச்சியிலும் பங்கு பெற்று மக்களுக்கு உழைக்கின்ற மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்
திரு. பா.பெஞ்ஜமின் அவர்களே!

இந்த நிகழ்ச்சியை சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
திருமதி.அமுதா, இ.ஆ.ப., அவர்களே!

மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்
திருமதி. மரகதம் குமரவேல் அவர்களே!

முன்னாள் அமைச்சர் திரு.சோமசுந்தரம் அவர்களே!

முன்னாள் அமைச்சர் திரு.வைகைசெல்வன் அவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் காஞ்சி பன்னீர்செல்வம் அவர்களே!
சிட்லபாக்கம் ராஜேந்திரன் அவர்களே, ஏஞ்சி பன்னீர்செல்வம் அவர்களே!

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள்
மரியாதைக்குரிய வாலாஜாபாத் கணேசன் அவர்களே!
மரியாதைக்குரிய மைதிலி திருநாவுக்கரசு அவர்களே!
மரியாதைக்குரிய ஜே.பாலாஜி அவர்களே,
மரியாதைக்குரிய வெங்கட்ராமன் அவர்களே,

மரியாதைக்குரிய திருக்கழுக்குன்றம் ஆறுமுகம் அவர்களே,
வருகை தந்துள்ள அரசு உயர் அதிகாரிகளே ,

கழகத்தினுடைய முன்னோடி நிர்வாகிகளே,
முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளே,

கூட்டுறவு சங்க நிர்வாகிகளே,
வருகை தந்துள்ள அரசு அலுவலர்களே,
பெரியோர்களே! தாய்மார்களே!
நலத்திட்ட உதவிகள் பெறவுள்ள பயனாளிகளே,
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!
வணக்கத்திற்குரிய உங்கள் அனைவருக்கும் பணிவாண வணக்கத்தைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று பேரறிஞர் அண்ணா அவர்கள்
பிறந்த காஞ்சி மாநகரில் அன்னாரின்
110 வது பிறந்த நாள் விழா நிகழ்ச்சியினைத்
தொடர்ந்து நடைபெறும் இந்த விழாவில்
கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், பட்டு நெசவுத் தொழிலுக்கு
பெயர் பெற்ற மாவட்டமாகும்.
இந்த மாவட்டத்தினை கோவில்கள்
நிறைந்த மாவட்டம் என்றும் அழைப்பார்கள் .

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக
பொறுப்பேற்ற பிறகு தனது பிறந்த ஊரான காஞ்சிபுரத்திற்கு மாவட்டத்தின்
தலைநகரை மாற்றினார்.

ஜுலை 1, 1968 ஆண்டு முதல் காஞ்சிபுரம்,
செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகராக
செயல்பட்டு வந்தது .

பெரும்பாலான புனித நகரங்கள்
ஆற்றின் கரையில் அமைந்துள்ளதைப் போன்றே,
காஞ்சிபுரமும்,  வேகவதி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது இந்த நகரத்திற்கு சிறப்பு மிக்கது .

நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும்,
பாடல்பெற்ற தலங்களில் காஞ்சிபுரம்
முக்கியமானதாகும்.   அப்பர், சுந்தரர் மற்றும்
சம்பந்தர்  காஞ்சிபுரம் ஏகாம்பரீஸ்வரர் மீது
திருமுறைகள் பாடியுள்ளனர்.

மாணிக்கவாசகர் தனது திருவாசகத்தில்
இத்தலத்தைப் பற்றி பாடியுள்ளார்.

சுற்றுலாத் தலமான மாமல்லபுரம்,
வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா,
வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் ஆகியவை
இந்த மாவட்டத்திற்கு மேலும் புகழ் சேர்க்கின்றன.

இங்கு அதிக அளவில் நடைபெறும்
நெசவுத் தொழிலைப் பற்றி இது குறிப்பிடுவதாகும்.
இங்கு தயாரிக்கப்படும் பட்டுப் புடவைகள் உலகப் பிரசித்தி பெற்றவை.  பரம்பரை பரம்பரையாகப்
பட்டுப் புடவைகள் நெய்யும் நெசவாளிகள்
இங்கு வாழ்கிறார்கள். அவர்களுக்கென்று ஒரு தனி சிறப்பு இந்த காஞ்சிபுரத்திற்கு இருக்கின்றது.   எங்கே போய் எடுத்தாலும், காஞ்சிபுரத்தில்தான் பட்டுப்புடவை எடுக்கவேண்டுமென்று பெண்கள் ஆர்வத்தோடு இருக்கின்ற பகுதி இந்த காஞ்சிபுரம் நகரம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்,
தனது பிறவியினை நல்ல முறையில் பயன்படுத்தி, மூடர்களின் சொற்களுக்கு செவி சாய்க்காமல் பகுத்தறிவுடன் ஆராய்ந்து பார்த்து,
மக்கள் நல பணிகளை ஆற்றி,  கோடிக்கணக்கான மக்கள்  அவர் மறைந்த பிறகும்  இன்றளவும் போற்றும் தலைவராக  உயர்ந்து நிற்கின்றார்.

‘‘மக்கள் கொடுக்கும் வரிப்பணம்
மக்களின் நல்வாழ்விற்காக பயன்பட வேண்டும்.

மக்களுடன் கூடியிரு. மக்களுடன் பழகு;
அவர்களுடன் வாழ்;
அவர்களுக்காக திட்டம் தீட்டி செயல்படு.
மக்களிடம் நீ போ – செய்''
என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களும்,
பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை
எந்த வகையில் நிறைவேற்ற முடியுமோ,
அந்த வகையில் நிறைவேற்றிக் காட்டினார்கள் .

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் வழியில்
மாண்புமிகு அம்மா அவர்களும்,
அவர்கள் வழிவந்த மாண்புமிகு அம்மாவின் அரசும்
மக்களின் நலன் ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றி வருகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்றது முதல்
இது வரை பல்வேறு பிரச்சனைகளில்
மக்களின் நலன் காக்கும் வகையில்
பல முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது.
அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- காவேரி பிரச்சனையில் சட்டரீதியான தீர்வு காணப்பட்டது ,
- மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க உத்தரவு பெற்றது,
- தொடர்ந்து மின்மிகை மாநிலமாக திகழ்ந்து கொண்டருக்கின்றது,
- தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றியதும்,
- சிறு நகரங்களுக்கு விமான போக்குவரத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது,
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் கடனை தமிழ்நாடு அரசே ஏற்கும் விதமாக உதய் திட்டத்தின் சேர்ந்து அதை இன்றைக்கு படிப்படியாக கடனை குறைத்து வருகிறது.
- தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட, நீரா பான உற்பத்திக்கு அனுமதி வழங்குதல்.
- வேளாண் பெருமக்களுக்கான பல்வேறு மானியத் திட்டங்கள் அளித்தல்,
- மண் வளத்தினைப் பாதுகாப்பதற்கும், நீர்நிலைகளை பராமரிப்பதற்குமான குடிமராமத்துத் திட்டம் அறிமுகப்படுத்துதல்,

- தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் பாலங்கள் மற்றும் சாலை வசதிகளை ஏற்படுத்துதல்,
- ஏழைகளுக்கு வீடு கட்டும் திட்டம் நகரம், பேரூராட்சி பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு சொந்தமாக வீடு கட்டுகின்ற திட்டத்தையும் அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது.
- இப்படி பல்வேறு திட்டங்கள்இன்றைக்கு அம்மாவினுடைய அரசு செயல்படுத்திக் கொண்டு இருக்கின்றது.
- பிளாஸ்டிக் ஒழிப்புக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு அடுத்த ஆண்டு ஜனவரி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த மாவட்டத்தில்
நிறைவேற்றப்பட்ட சாதனைகள் சிலவற்றை
இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

**இம்மாவட்ட மக்களின் நெடுநாள் கோரிக்கையான**
**புதிய பேருந்து நிலையம் கீழ்கதிர்பூர் கிராமத்தில் அமைக்க 38 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணி துவக்கப்பட உள்ளது.**

**மழைநீர் கடலுக்கு செல்வதை தடுக்கும் வகையில் இம்மாவட்டத்தில்**
**7 தடுப்பணைகள் கட்ட நான் அறிவித்து, கட்டுமானப் பணிகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஏனென்றால், பெய்கின்ற மழைநீர் வீணாக கடலில் கலக்கின்றது. ஒரு சொட்டு நீர் கூட வீணாகக் கூடாது என்பதற்காக பெய்கின்ற மழை நீர் சேமித்து வைக்கின்ற அளவிற்கு, இன்றைக்கு இந்த மாவட்டத்தில் 7 தடுப்பணைகள் கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று சுட்டிக்காட்டுகிறேன்.**

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில்**
**2 கோடி ரூபாய் செலவில் மக்கள் குறை தீர்க்கும் நாள் நடத்துவதற்கு, சுமார் 300 நபர்கள் அமரக்கூடிய அளவில் "பொது மக்கள் நல்லுறவு மையம்", இங்கே அமைக்கப்பட்டிருக்கின்றது.**

**ஒரு கோடியே 14 லட்சம் ரூபாய் செலவில்**
**திருப்புக்குழி, மதுரமங்கலம் ஆகிய இடங்களில்**
**கிராமப்புர சுகாதார பயிற்சி மையக் கட்டடம்,**

காஞ்சிபுரம் மாவட்ட தலைமை அரசு
மருத்துவமனையில் தாய்சேய் நல பிரிவு

ரூ. 20 கோடி செலவில் அமைக்கப்படும்.

தமிழகத்தில் முதன்முறையாக காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனைக்கு ரூ. 23 கோடி மதிப்பில் லீனியர் ஆக்ஸிலரேட்டர், கோபல்ட் சிகிச்சை அலகு மற்றும் சி.டி. ஸ்கேன் கருவி ஆகியவை வழங்கப்படும். ஏனென்றால், புற்று நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்குதேவையான சிகிச்சை வழங்க வேண்டும் என்பதற்காக ரூ.23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கருவிகள் வழங்கப்பட்டு, ஸ்கேன் செய்யப்பட்டு, புற்றுநோயை கண்டறிந்துஅதற்கு உரிய சிகிச்சை செய்வதற்கு அம்மாவினுடைய அரசு 23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழகத்தில் சாலை விபத்துக்களால் ஏற்படும் இறப்பை குறைக்க தமிழ்நாடு அரசு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்பு திட்டம் (Tamil Nadu Accident and Emergency Care Initiative -“தாய் திட்டம்”) ரூ.20 கோடி மதிப்பில் செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் செயல்படுத்தப்படும். ஏனென்றால், அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அப்படி விபத்து ஏற்படுகின்றபொழுது, அவர்கள் உயிரை காப்பாற்ற வேண்டிய கடமையிலே இன்றைக்கு அம்மாவினுடைய அரசு 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்றது.

மேலும், காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை ஒப்புயர்வு மையம் ரூ. 8.55 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

இதுபோன்ற ஏனைய திட்டங்கள் மூலம் மக்கள் நல்வாழ்வுத்துறை காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ.90 கோடி மதிப்பிலான திட்டங்களை செயல்படுத்த உள்ளது.

தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையின் வெகு சிறப்பான செயல்பாட்டின் மூலம் தாய்மார்கள் மற்றும்
சிசு இறப்பு விகிதம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

2030ஆம் ஆண்டில் அடையவேண்டிய நிலையான வளர்ச்சி இலக்குகளை தமிழகம் 14 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அடைந்து இமாலய சாதனை புரிந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறந்தவர்களின் உடல் உறுப்புகளைக் கொண்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் மிகச் சிறப்பாகச் செயல்படுவதில், நாட்டிலேயே முதன்மை மாநிலத்திற்கான மத்திய அரசின் விருதினை தொடர்ந்து மூன்று ஆண்டுகள் தமிழ்நாடு பெற்று வருகிறது. உடல் மாற்று அறுவை சிகிச்சை

இன்றைக்கு இந்தியாவிலேயே அரசு மருத்துவமனையில் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிற்து. தனியார் மருத்துவமனையைக் காட்டிலும் அரசு மருத்துவமனையில் கூடுதல் வசதி செய்து கொடுக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்வதற்காக இன்றைக்கு அரசு பல்வேறு நல்ல திட்டங்களை எடுத்து வருகிறது என்பதை சுட்டிக்காட்டுகின்றேன்.
தமிழக அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகளின் காரணமாக விபத்து நேரிடும் பகுதிகளுக்கு
108 அவசரகால ஊர்தி சென்றடையும் நேரம்
11 நிமிடத்திலிருந்து 8.32 நிமிடமாக குறைக்கப்பட்டுள்ளது. இது வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையானதாகும். உயிரை காப்பதற்காக அந்த வாகனம் வேகமாக, துரிதமாக செல்லக்கூடிய வகையிலே இன்றைக்கு அதனுடைய நேரத்தை குறைக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில்
பரந்தூர் கிராமத்தில் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் அமைக்கப்படும்.

2 கோடியே 61 லட்சம் ரூபாய் செலவில்
வாலாஜாபாத்தில் வட்டாட்சியர் அலுவலகம்,

ஒரு கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில்
சிங்காடிவாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில்
9 வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், குடிநீர் வசதி, கழிப்பறைகள் மற்றும் சுற்றுச் சுவர் ஆகியவை,

60 லட்சம் ரூபாய் செலவில் பஞ்சுபேட்டை
வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில்
உரக் கட்டுப்பாடு ஆய்வுக்கூடம்
உட்பட 34 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் கட்டிமுடிக்கப்பட்ட 164 கட்டடங்களை
இன்று நான் திறந்து வைத்துள்ளேன்.

6 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில்
காஞ்சிபுரம் மற்றும் திருப்பெரும்புதூர்
வட்டாட்சியர் அலுவலகங்களை புதிதாக கட்டுதல்,

14 கோடி ரூபாய் செலவில் காஞ்சிபுரம்
பேரறிஞர் அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கு
நவீன வசதிகளுடன் புதிதாக அமைக்க

கட்டுமானப் பணிகள்,

18 கோடி ரூபாய் மதிப்பில்
காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவுக்கு
புதிய கட்டடம் உட்பட 70 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பிலான 101 பணிகளுக்கு இன்று
நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இது தவிர,தமிழ்நாடு முதலமைச்சரின்
சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ்
2 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பில்
2018–19 ஆம் ஆண்டில் 123 பயனாளிகளுக்கு
வீடு கட்ட ஆணை,

30 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்,

அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ்
75 லட்சம் ரூபாய் மதிப்பில் 300 பயனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகனம்,

ஆகியவை உள்பட பல்வேறு துறைகளைச் சார்ந்த
32 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் 6250 பயனாளிகளுக்கு
இன்று என்னால் வழங்கப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றதிலிருந்து இன்று வரை 23 ஆயிரத்து 269 கோடியே 16 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 42 ஆயிரத்து 136 பணிகள் துவக்கி வைத்துள்ளேன். அது அம்மா அரசு செய்த சாதனை என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

19 ஆயிரத்து 103 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 598 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஆக மொத்தம் 42 ஆயிரத்து 373 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 49 ஆயிரத்து 734 பணிகள் நடைபெறுகின்றன

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) நெடுஞ்சாலைத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பேரூராட்சிகள் துறை மற்றும் நகராட்சி நிர்வாகத்துறை மூலம் **393** கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்புப்பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.
ஒவ்வொரு முறையும் பருவகாலத்தில் மழை பெய்கின்றபொழுது, ஆங்காங்கே தண்ணீர் தேங்கி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பகுதிகளைக் கண்டறிந்து அதிக வெள்ளம் வருகின்றபோது, அந்தரப் பகுதியைக் கண்டறிந்து அங்கு எந்தவிதத்திலும், வெள்ளம் ஏற்படாத வகையில், மக்கள் பாதிக்காத அளவிற்கு வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. அதற்காகத்தான், மரியாதைக்குரிய திருமதி.அமுதா, இ.ஆ.ப. அவர்களையே இந்த மாவட்டத்தினுடைய பொறுப்பாளராக நியமித்திருக்கின்றோம்.

மேலும் ஊரக வளர்ச்சித்துறை மூலம் கிருகம்பாக்கம் பகுதியில் அடையாற்றின் குறுக்கே **5.93** கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டுவதற்காக இன்று அடிக்கல் நாட்டப்பட்டது.
மேற்சொன்ன பணிகள் முடிவடையும் பொழுது, காஞ்சிபுரம் மாவட்டத்தில் வெள்ள பாதிப்புகள்
வெகுவாக குறையும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை வழி நின்று, மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து மக்களுக்கு பணியாற்றும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்த அனைவருக்கும்
நன்றி தெரிவித்துக் கொண்டு,

வாழ்க அண்ணா நாமம்,
வளர்க மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் புகழ்,
ஓங்குக மாண்புமிகு அம்மாவின் புகழ்,
தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சி.

நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**